# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 09/ந/2020**

**நாள் : 28/02/2020**

**திரு P. சுதர்சன்,**
**நூம்பல்,** – **முறையீட்டு மனுதாரர்**
**சென்னை–77.**

**நகராட்சி ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி..** – **எதிர் மனுதாரர்**

திருவள்ளூர் மாவட்டம், நூம்பல், ஜி–1, கேபிடல் என்கிளேவ், நீதிபதிகள் காலனி, பிளாட்17–D கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு P. சுதர்சன் அவர்களின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 09/2020 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக திருவேற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், நூம்பல், ஜி–1, கேபிடல் என்கிளேவ், நீதிபதிகள் காலனி, பிளாட்17–D கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு P. சுதர்சன் என்பவர் திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட கோப்பரச நல்லூர் – வேலப்பன் சாவடிக்கு இடையே அமைந்துள்ள மழைநீர் வடிகால்வாயில் அனுமதியின்றி கழிவு நீர் கலக்கச் செய்வதால், வடிகால்வாயில் நிரம்பி சாலையில் வழிந்தோடி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது என்றும், இதற்கு நகராட்சி அலுவலர்கள் உடந்தையாக உள்ளனர் என்று தெரிவித்து அவ்வலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதுடன் கழிவு நீர் வடிகால்வாயில் கலப்பதை தடுத்து நிறுத்த ஆணையிடக்கோரியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சியின் துப்புரவு ஆய்வாளரால் அப்பகுதி ஆய்வு செய்யப்பட்டது என்றும், கோப்பரசநல்லூர் நூம்பல் பகுதியிலிருந்து தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளில் ஊடாக வேலப்பன் சாவடி பூந்தமல்லி நெடுஞ்சாலை வரையில் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான கழிவு நீர் வடிகால்வாய் உள்ளது என்றும் அப்பகுதியில் உள்ள அசோக் லைப் வாட்டர் கம்பெனி, A.S. ஷிப்பிங்கார்ப்பரேசன், கிரீன்வேய்ஸ் ஷிப்பிங் கம்பெனி போன்ற நிறுவனங்களிடமிருந்து வெளியேறும் கழிவு நீர் மேற்குறிப்பிட்ட வடிகால் கால்வாயில் கலக்க விடுவதால் அத்தொழில் நிறுவனங்களுக்கு 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு

பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ் உரிய அறிவிப்பு வழங்கப்பட்டு கழிவு நீர் வெளியேற்றப்படுவதை தடுத்து நிறுத்தப்படவேண்டும் என நகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும், தொழிற்சாலைகளின் கழிவு நீரை அவர்களது இடத்திற்குள்ளாகவே நச்சு நீர்த் தொட்டி / உறிஞ்சு குழி போன்ற உட்கட்டமைப்பினை ஏற்படுத்தி, அதில் விடுமாறும் சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு அவ்வறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதி மிகவும் தாழ்வான பகுதி என்றும் மழைக்காலங்களில் மழை நீர் வெளியேறாமல் பொதுமக்களுக்கு மிகவும் சிரமத்தை ஏற்படுத்துகிறது என்றும், அத்தகைய தருணங்களில் நீர் உறிஞ்சு மின் மோட்டார் மூலம் மழை நீர் வெளியேற்றப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரர் கண்டறிந்து தெரிவித்துள்ள சுகாதார சீர்கேட்டினை களையும் பொருட்டு சம்பந்தப்பட்ட 13 தொழில் நிறுவனங்களுக்கு உரிய அறிவிப்பிை, 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் பிரிவின் கீழ் நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. எனினும், மேற்குறிப்பிட்ட அறிவிப்பினை ஏற்று சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை தடுத்து நிறுத்தியுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறு நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. தவறும் நிறுவனங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மழை நீர் வடிகால்வாயில் கலப்பதை கண்காணிக்கத் தவறும் சுகாதார அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

10.3.2020

**பெறுநர்**

1. **திரு P. சுதர்சன்,**
   **பிளாட் எண்.17–D,**
   **நீதிபதிகள் காலனி,**
   **G-1, கேபிடல் என்கிளேவ்,**
   **நூம்பல், சென்னை – 77.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **திருவேற்காடு நகராட்சி,**
   **திருவேற்காடு, சென்னை – 77.**

3. **நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,**
   **செங்கல்பட்டு மண்டலம்,**
   **தாம்பரம், சென்னை – 600 045.**

**நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**